# துவாக்குடி நகராட்சி

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>MCR No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of Council</th></tr>
<tr><td>28.06.2017</td><td></td><td>2017ம் ஆண்டு ஜுன் மாதம் 28–ம் தேதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க கூட்டம் நடைபெறும்.<br><br>தனி அலுவலர்,<br>துவாக்குடி நகராட்சி.</td><td></td></tr>
<tr><td>28.06.2017</td><td>61</td><td><u>பொருள் எண். 1</u><br><br>நகராட்சியின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும் தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பு உருவாக்குவதற்கு துவாக்குடி நகராட்சி தீர்மான எண். 280 நாள். 20.05.2013 –ல் உரிய தீர்மானம் இயற்றி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பியுள்ளது. எனவே, தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகள் 1970 ன் ( Tamil Nadu Municipal General Service Rules 1970 ) விதி 1ன் கீழ் இடம் பெற்றுள்ளன.<br><br>
<table>
<tr><td>Class II</td><td>Category 2</td><td>Accounts Special Grade and Selection Grade Municipalities</td></tr>
<tr><td>Class IV</td><td>Category 2</td><td>Assistant Accounts Special Grade and Selection Grade Municipalities</td></tr>
<tr><td></td><td>Category 5</td><td>Accoutants 1st Grade Municipalities</td></tr>
<tr><td>Class V</td><td>Category 2</td><td>Accontants, II and III Grade Municipalities</td></tr>
</table>
<br>ஆகிய நடைமுறைகயிலுள்ள கணக்குப்பணி தொடர்பான பதவிகளை தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகள் 1970 லிருந்து நீக்கம் செய்திடவும், விதி எண். 3(b)ன் கீழ்<br><br>Class II, வரிசை எண். 2ல் குறிப்பிடப்பட்டுள்ள<br>Accounts Special Grade and Selection Grade Municipalities<br><br>Class IV, வரிசை எண். 2ல் குறிப்பிடப்பட்டுள்ள<br>Assistant Accounts Special Grade and Selection Grade Municipalities</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | Class IV, வரிசை எண். 2ல் குறிப்பிடப்பட்டுள்ள Accoutants 1st Grade Municipalities<br>Class V, வரிசை எண். 2ல் குறிப்பிடப்பட்டுள்ள Accontants, II and III Grade Municipalities<br><br>பதவிப் பெயர்களை நீக்கம் செய்திடவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 370 / சி1 / 2013** | |
| 28.06.2017 | 62 | **பொருள் எண். 2**<br>துவாக்குடி நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 3 எண்ணிக்கையிலான இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களில், ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தினை திரும்ப ஒப்படைத்து, அதற்கு பதிலான ஒரு கணக்கு உதவியாளர் (Accounts Assistant) பணியிடத்தினை இந்நகராட்சிக்கு புதிதாக உருவாக்கிட இந்நகராட்சி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 370 / சி1 / 2013** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 28.06.2017 | 63 | **பொருள் எண். 3**<br>துவாக்குடி நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN 45 BY 4097 வாகனத்தின் டயர்கள் மற்றும் டியூப்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் புதிதாக கொள்முதல் செய்து கொள்ள விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. Sai Tyre Centre - ரூ. 58950/–<br>2. M.N.A Tyres & Auto mobiles - ரூ. 58600/–<br>3. Kannathal Agencies - ரூ. 57600/–<br>மேற்படி வரப்பெற்ற வரிசை எண். 3–ல் கண்டுள்ள Kannathal Agencies என்ற நிறுவனத்தில் கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான செலவினத் தொகை ரூ. 57600/– க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 394 / எச்1 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 28.06.2017 | 64 | **<u>பொருள் எண். 4</u>**<br><br>துவாக்குடி நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் தொடர்பான அறிவிப்பினை தினத்தந்தி நாளிதழில் 1.6.2017 ம் தேதி விளம்பரம் செய்யப்பட்டமைக்கு தொகை ரூ. 3272/– மட்டும் வழங்க கோரி Bright Advertising நிறுவனத்திடமிருந்து பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது, எனவே மேற்படியான நிறுவனத்திற்கு தொகை ரூ. 3272/– மட்டும் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 594 / எச்1 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 28.06.2017 | 65 | **<u>பொருள் எண். 5</u>**<br><br>துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வந்த குடிநீர் சுத்திகரிப்பான் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் நகராட்சி வரும் பொது மக்கள் மற்றும் ஆதார் எண் பதிவதற்கு வருகை தரும் குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் குடிநீர் இல்லாமல் மிகவும் சிரமப்படுகின்றனர் எனவே இந்நகராட்சி குடிநீர் சுத்திகரிப்பான் இயந்திரத்தின் பழுதினை சரி செய்வதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 5,000/– ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு : –** 1920 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்ட செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 253/ இ1 / 2016** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

______________ X ______________